**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 30/2023 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மாதவன் | த–பெ | முத்துக்கருப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 67/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | -- | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2025**

---

**17.02.2025**

**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்

கடந்த 06.12.2022 ம் தேதியிட்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி , மன்னூர்பேட் கிளை, **காசோலை (காசோலை எண் 611116 அசல் ம.சா.ஆ.1)** ஆகும். கடந்த 06.12.2022 காரைக்குடி பாரத ஸ்டேட் வங்கியில் பணம் செலுத்தியதற்கான **டெப்பாசிட் சலான் ம.சா.ஆ. 2 ஆகும்.** கடந்த 23.12.2022 அன்று ம.சா.ஆ. 1 காசோலை போதிய தொகை இல்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்ட **ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.3 ஆகும்.** கடந்த 31.12.2022 ம் தேதியன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ 4 ஆகு**ம். மேற்படி ம.சா.ஆ.4 அறிவிப்பை கடந்த 04.01.2023 அன்று எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட **அஞ்சலக உறை ம.சா.ஆ. 5 ஆகும்.** கடந்த 06.01.2023 எதிரிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்ட இரண்டு **சட்ட அறிவிப்புகள் ம.சா.ஆ. 6 ஆகும்.** கடந்த 09.01.2023 அன்று இரண்டு சட்ட அறிவிப்புகளையும் பெற்றுக்கொண்டதற்கான

**அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (எண்ணிக்கை–2) ம.சா.ஆ. 7 ஆகும்.** எதிரியின் **ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.8 ஆகும்**. **(அசலுடன்ஒப்பீடு செய்யப்பட்டது.)** புகார்தாரருக்கு ஆன் லைனில் பணம் அனுப்பியதற்கான **ரசீது அசல் ம.சா.ஆ. 9 ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**குறுக்கு விசாரணை – இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.